மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
மூன்றாம் தவணைப் பரீட்சை- 2018
முயற்சியாண்மைக் கல்வி

**தரம் 10** **நேரம்:- 3 மணித்தியாலம்**

**சுட்டெண்:- ..........................** **புள்ளி:-.........**

## பகுதி 1

**கவனிக்குக:-**
1) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.
2) இலக்கம் 01 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள (1), (2), (3), (4) ஆகிய விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிக

1) கமலன் என்பவர் தனது தந்தையரால் நடாத்தப்பட்ட வணிகத்தை தொடர்ந்து நடாத்திச் செல்கின்றார். குமரன் என்பவர் பல்வேறு வித்தியாசமான வடிவமைப்புக்களுடன் கூடிய தொப்பிகளை உற்பத்தி செய்து இலாபம் உழைத்து வருகின்றார். மேலே தரப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் பின்வருவனவற்றுள் மிகவும் சரியான கூற்று எது?
   (1) கமலன் முயற்சியாளராகக் காணப்படும் அதேவேளை குமரன் ஒரு முயற்சியாளராகக் காணப்படவில்லை.
   (2) குமரன் முயற்சியாளராகக் காணப்படும் அதேவேளை கமலன் ஒரு வணிகராகக் காணப்படுகின்றார்.
   (3) இருவருமே முயற்சியாளராகக் காணப்படுகின்றனர்.
   (4) இருவருமே சமூக முயற்சியாளராகக் காணப்படுகின்றனர்.

2) முயற்சியாண்மை தொடர்பான சில கூற்றுக்கள் கீழே தரப்படுகின்றன.
   A. உற்பத்திக் காரணிகள் முயற்சியாளராலேயே நெறிப்படுத்தப்படுகின்றன.
   B. முயற்சியாண்மை தனிநபர்கள் வயது முதிந்தோராகும் போது உருவாகின்ற திறனாகும்.
   C. முயற்சியாளர் நட்ட இடரை ஏற்பவர் ஆவார்.
   இவற்றுள் முயற்சியாண்மை தொடர்பான சரியான கூற்று எது?
   (1) A யும், B யும் (2) A யும், C யும் (3) A, B, C ஆகிய எல்லாம் (4) B, C மட்டும்

3) உற்பத்திக்குத் தேவையான இயற்கையின் தொடையாகக் கிடைக்கப்பெற்றுள்ள சகல இயற்கை வளங்களையும் குறிப்பது,
   (1) நிலம் (2) உழைப்பு (3) மூலதனம் (4) முயற்சி

4) பின்வருவனவற்றுள் ஆக்கத்திறனுக்கு தடையாக அமையும் காரணியாகக் கருதப்படக்கூடியது
   (1) பல்லினத் தன்மையை உருவாக்கிக் கொள்ளல்
   (2) ஆக்கபூர்வமான நடத்தைகளை பின்பற்றுதல்
   (3) உடனடிப் பெறுபேற்றினை எதிர்பார்த்தல்
   (4) தோல்விகளை சகித்துக் கொள்ளல்

5) புத்துருவாக்கம் இடம்பெறும் முறைகளில் தற்போதுள்ள தற்போதுள்ள பொருள் அல்லது சேவை அல்லது செயற்பாடொன்றிலிருந்து புதிய பாவனையை உருவாக்குவதைக் குறிப்பது,
   (1) புதிய கண்டுபிடிப்பு (2) நீடிப்பு (3) பின்பற்றல் (4) கூட்டு

6) பின்வருவனவற்றுள் தேவைகளை மட்டும் கொண்ட விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.
   (1) சோறு, பாதணி, குடிசைவீடு
   (2) உணவு, பாதணி, குடிசைவீடு
   (3) உணவு, உடை, உறையுள்
   (4) இடியப்பம், காப்பு, உறையுள்

7) விருப்பம் ஒன்றின் பண்பொன்றாகக் கருதப்படக் கூடியது,
   (1) ஆரம்பத்திலேயே உருவாகுதல்
   (2) சகலருக்கும் பொதுவானது
   (3) பல்வேறுபட்டது
   (4) வணிகர்களால் தோற்றுவிக்க முடியாது

8) முயற்சியாளருக்கும், வணிகர்களுக்கும் இடையிலான ஒற்றுமையாகக் கருதப்பட முடியாதது,
(1) பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபடல்
(2) சூழல் மாற்றங்களை இனங்கண்டு ஆக்கரீதியான புத்தாக்கங்களை முன்வைத்தல்
(3) வளங்களைப் பயன்படுத்தல்
(4) போட்டிக்கு முகங்கொடுத்தல்

9) முயற்சியாண்மை மூலம் பொருளாதாரமொன்றிற்கு கிடைக்கும் அனுகூலமாக அமைவது,
(1) பயன்படுத்தாத ஆற்றல்களை பயன்படுத்திக் கொள்ளல்
(2) சமூகநலன் பொருட்டு பங்களிப்புச் செய்தல்
(3) தேசிய வளங்கள் பயன்படுத்தப்படல்
(4) கவர்ச்சிகரமான இலாபம் ஒன்றினை உழைத்தல்

10) சிறந்த சுற்றாடல் முகாமைத்துவத்திற்கான தரவிருதினைப் பெற்ற பாடசாலை அதிபர் எவ்வகை முயற்சியாளராகக் கருதப்படுவார்?
(1) உள்ளக முயற்சியாளர்
(2) சமூக முயற்சியாளர்
(3) வணிகர்களான முயற்சியாளர்
(4) பொருளாதார முயற்சியாளர்

11) முயற்சியாளர் ஒருவரின் திறன்கள் மற்றும் ஆற்றல்களை பிரயோக ரீதியாக பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை வழங்கும் வணிகம்,
(1) பேரளவு வணிகம் (2) நடுத்தரளவு வணிகம் (3) கூட்டுறவு வணிகம் (4) சிற்றளவு வணிகம்

12) சிற்றளவு வணிகம் ஒன்றின் பண்பாக அமைவது,
(1) முதலீடு உயர்வானதாக இருத்தல்
(2) ஊழியர் தொகை அதிகமாக இருத்தல்
(3) வணிகம் தனி ஒருவருக்கு உரிமையாக இருத்தல்
(4) சந்தைப்பரப்பு பாரியதாகவிருத்தல்

13) முயற்சியாளரின் வகிபாகங்களின் செயற்பாடுகளில் உரிமையாளர் என்ற வகிபாகச் செயற்பாட்டினைக் குறிப்பது,
(1) உயர்தரமுடைய பொருட்களை உற்பத்தி செய்து வழங்குதல்
(2) தன்னிடமுள்ள பணத்தை இட்டு வணிகத்தை ஆரம்பித்தல்
(3) திட்டமிட்ட பெறுபேறுகளை உண்மைப் பெறுபேறுகளுடன் ஒப்பிடல்
(4) வணிகத்தில் ஊழியர்களுடன் செயற்படும் போது அவர்களை வழிப்படுத்தி வழிகாட்டல்களை வழங்குதல்

14) முயற்சியாளர் ஒருவரால் உருவாக்கக் கூடிய எண்ணக்கருவாக்கத் திறனுக்கு உதாரணமாக அமைவது
(1) சிறந்த ஊழியர்களை சேர்த்துக் கொள்ள இருக்கின்ற திறன்
(2) ஊழியர்களை ஊக்கப்படுத்தல்
(3) புதிய சந்தை வாய்ப்புக்களை தேடிக் கொள்ளல்
(4) உரிய நேரத்திற்கு வேலைகளில் ஈடுபடல்

15) வணிகச் சூழல் வகைகள் சில கீழே தரப்படுகின்றன
A- உரிமையாளர்
B- பொருளாதாரச் சூழல்
C- பூகோளச் சூழல்
D- ஊழியர்
E- அரசியல் சூழல்
F- முகாமையாளர்

மேற்குறிப்பிட்டவற்றுள் புறச் சூழல் காரணிகளை மட்டும் உள்ளடக்கும் விடை தொகுதியாக அமைவது,
(1) B,C,E (2) A,D,F (3) B,D,F (4) C,E,F

16) பின்வருவனவற்றுள் அண்மிய சூழல் காரணிகளை மட்டும் உள்ளடக்கிய விடைத்தொகுதியினை தெரிவு செய்க.

(1) பொருளாதாரச் சூழல், சட்டச் சூழல், வாடிக்கையாளர்
(2) ஊழியர், முகாமையாளர், வாடிக்கையாளர்
(3) வாடிக்கையாளர், வழங்குநர்கள், போட்டியாளர்கள்
(4) பூகோளச் சூழல், பொருளாதாரச் சூழல், இயற்கைச் சூழல்

17) வணிகமொன்றின் அகச் சூழலை ஆய்வு செய்வதன் மூலம் …………………….. …………………….. என்பவற்றை அறிந்து கொள்ள முடியும்
(1) பலம், பலவீனம் (3) பலம், வாய்ப்பு
(2) வாய்ப்பு, அச்சுறுத்தல் (4) பலவீனம், அச்சுறுத்தல்

18) முதலாம் நிலை வணிகத்தில் உள்ளடங்கும் பொருளாதாரச் செயற்பாடு,
(1) பாலம் அமைத்தல் (3) வங்கிச்சேவை
(2) பாதணி உற்பத்தி (4) இரத்தினக்கல் அகழ்தல்

19) அனைத்து வளங்களிலிருந்தும் உச்சபயனை பெற்றுக்கொள்ள அடிப்படையாக அமையும் வளம்,
(1) மனிதவளம் (3) கனிய வளம்
(2) பௌதீக வளம் (4) இயற்கைவளம்

20) சந்தையிலுள்ள நுகர்வோரில் ஒரு குறிப்பிட்ட குழுவினர் தமது தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்து கொள்ளமுடியாத நிலை ……………………….. எனப்படும்.

(1) சந்தை இடம் (3) சந்தை இடைவெளி
(2) சந்தைக் கேள்வி (4) சந்தை நிரம்பல்

21) நந்தன் என்பவர் பிரதான நகரத்தில் காகிதாதிப் பொருட்களை விற்பனை செய்யும் வணிகம் ஒன்றை நடாத்துகின்றார். இவர் தனது விற்பனைப் பொருட்களுக்கான மொத்த களஞ்சியசாலை ஒன்றினை அமைக்க விரும்புகின்றார். அதற்கு பொருத்தமான் இடமாக அமைவது,
(1) பிரபல பாடசாலைகள் அண்மையில் அமைந்துள்ள இடம்
(2) அமைதியான, அழகான சூழல் அமைந்துள்ள இடம்
(3) காட்சியறை வசதிகள் அதிகமாகவுள்ள இடம்
(4) அதிக இடப்பரப்பினைக் கொண்ட கட்டிடம், வாகன தரிப்பிட வசதி மற்றும் போக்குவரத்து வசதி கொண்ட இடம்

22) புதிய வணிகர் ஒருவருக்கு அடிப்படை மூலதனத்தை பெற்றுக்கொள்ளக் கூடிய இலகுவான வழிமுறையாக அமைவது,
(1) சுயசேமிப்பு மூலம் (3) மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதன் மூலம்
(2) உற்பத்திகளை சந்தைப்படுத்துவதன் மூலம் (4) பல்வேறு செலவுகளை கட்டுப்படுத்துவதன் மூலம்

23) நீரழிவு நோயாளருக்குரிய விசேடமான காலணிகளை அறிமுகம் செய்தல்
(1) தற்போதைய சந்தைக்கு தற்போது காணப்படும் உற்பத்திப்பொருளொன்றை வழங்குதல் என்ப்படும்.
(2) புதிய சந்தைக்கு தற்போது காணப்படும் உற்பத்திப் பொருளொன்றை வழங்குதல் எனப்படும்.
(3) தற்போதைய சந்தைக்கு புதிய உற்பத்திப் பொருளொன்றை வழங்குதல் எனப்படும்.
(4) புதிய சந்தைக்கு புதிய உற்பத்திப் பொருளொன்றை வழங்குதல் எனப்படும்.

24) SWOT பகுப்பாய்வினை மேற்கொள்ளும் போது குறிப்பிட்ட ஒரு வணிகத்தில் நிதிப் பற்றாக்குறை, மூலப்பொருள் பற்றாக்குறை, ஊழியர் அர்ப்பணிப்பின்மை காணப்படின் அதனைக் குறித்து நிற்பது நிறுவனத்தின்,
(1) பலத்தையாகும் (2) பலவீனத்தையாகும் (3) அச்சுறுத்தலையாகும் (4) வாய்ப்பையாகும்

25) புதிய உற்பத்தியொன்றை முன்வைப்பதற்கான SCAMPER மாதிரியில் S குறிப்பது,
(1) மாற்றீடு செய்தல் (2) பெரிதாக்குதல் (3) தொடர்புபடுத்தல் (4) சிறிதாக்குதல்

(25×2= 50 புள்ளிகள்)

# முயற்சியாண்மைக் கல்வி

## பகுதி 11

❖ விரும்பிய ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

**வினா இல 01**

01. பின்வரும் கூற்றுக்களுக்கு பொருத்தமான முயற்சியாண்மைப் பண்புகளைக் குறிப்படுக.
    - I. முயற்சியாளர் ஒருவர் தேவைப்படும் சந்தர்ப்பங்களின்போது தனது தீர்மானங்களில் மாற்றம் செய்வதற்கு பின்னிற்க மாட்டார்.
    - II. முயற்சியாளர் ஒருவர் சூழலில் இடம்பெறும் மாற்றங்கள் தொடர்பாக அடிக்கடி அவதானத்துடன் இருப்பார்.
02. ஆக்கத்திறன் என்பதனால் கருதப்படுவது யாது?
03. கீழே உற்பத்திக்கு பயன்படுத்தும் வளங்கள் சில தரப்படுகின்றன.

| | |
|---|---|
| கணக்காளர் | மாற்றங்களை ஏற்படுத்தல் |
| நீர் | கருவிகளும் இயந்திரங்களும் |
| மோட்டார் வாகனம் | மூலப்பொருள் |
| புத்துருவாக்கங்களை உருவாக்கல் | இயந்திர இயக்குனர் |

மேற்படி விடயங்களை கீழ் குறிப்பிடப்படும் தலைப்புக்களின் கீழ் வகைப்படுத்திக் காட்டுக.

(அ) நிலம் (இ) மூலதனம்

(ஆ) உழைப்பு (ஈ) முயற்சி

04. பொருட்களுக்கும், சேவைகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக.
05. சிவராமன் என்பவர் தனது விவசாய நடவடிக்கைகளுக்காக இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்தி உயர்விளைச்சலைப் பெற்றுக் கொண்டார். இவரை ஒரு முயற்சியாளராகவா? வணிகராகவா? கருத முடியும். உமது விடைக்கான காரணத்தைத் தருக. (2×5= 10 புள்ளிகள்)

**வினா இல 02**

01. பின்வரும் கூற்றுக்கள் சரியா? பிழையா? என்பதைக் குறிப்பிடுக.
    - I. சிற்றளவு வணிகங்கள் அவை முதலீடு செய்துள்ள மூலதனத்தின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டே அறிமுகப்படுத்தப்படுகின்றன.
    - II. வெற்றிகரமான பெரும்பாலான வணிக முயற்சியாளர்களின் முதலாவது ஆரம்பம் பேரளவு வணிகங்களாகும்.
02. சிற்றளவு வணிகங்களினால் இலங்கைக்கு கிடைக்கும் நன்மைகள் நான்கு தருக.
03. கீழே சில வணிகக் கருமங்கள் தரப்படுகின்றன.
    - I. ரூ 50000 தொகையினை வணிகத்திலிடல்
    - II. தமக்குரிய விடுமுறைகளை (Leave) எடுக்காது வேலை செய்தவர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவொன்றை வழங்குதல்

    மேற்குறித்த வணிகக்கருமங்களுக்குப் பொருத்தமான முயற்சியாளர் வகிபங்குகளைக் குறிப்பிடுக.
04. முயற்சியாண்மைக்குரிய வகிபாகங்களை நிறைவேற்றுவதற்கு தேவையான அடிப்படைத் திறன்கள் நான்கினைப் பெயரிடுக.
05. வணிகமொன்றை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைச் செயற்பாடுகள் நான்கு தருக. (2×5= 10 புள்ளிகள்)

**வினா இல 03**

01. வணிகச் சூழலிலுள்ள உண்மையான மாற்றங்களை அறிந்து கொள்வதனூடாக முயற்சியாளருக்கு பல்வேறு பயன்கள் கிடைக்கமுடியும். அவ்வாறான பயன்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
02. பின்வரும் கூற்றுக்களுக்கு பொருத்தமான சூழற் காரணிகளைக் குறிப்பிடுக.
    - I. இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு வரி அறவிடப்படல்
    - II. சூரிய சக்தியின் மூலம் இயங்கக்கூடிய இயந்திரங்கள் அறிமுகப்படுத்தல்
03. இலங்கையின் பொருளாதாரத்தில் உள்ளடங்குகின்ற பிரதான வணிகத்துறைகளைக் குறிப்பிடுக.
04. இலங்கையில் உள்ள மனித வளங்களில் உள்ள விசேட அம்சங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
05. தற்காலத்தில் விவசாய நடவடிக்கை மூலம் எழக்கூடிய வணிக வாய்ப்புக்களுக்கு நான்கு உதாரணம் தருக. (2×5= 10 புள்ளிகள்)

**வினா இல 04**

01. முயற்சியாளர் ஒருவர் ஏன் சூழல் தொடர்பான முன்னேற்றங்களை எந்நேரமும் அறிந்து வைத்திருக்க வேண்டும் என்பதற்கான காரணங்கள் நான்கு தருக.
02. நீர் ஒரு சிற்றளவு வணிகமொன்றை ஆரம்பிக்க எண்ணுகின்றீர். இது தொடர்பாக எத்தகைய தீர்மானங்களை மேற்கொள்வீர் என்பதைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.
03. திலீபன் என்பவர் துணிகளிலான கைப்பைகளை தயாரித்து விற்பனை செய்யும் வணிகம் ஒன்றை ஆரம்பிக்க எண்ணுகின்றார். இவர் எத்தகைய இலக்கு நுகர்வோரை கருத்தில் கொண்டு சந்தைக்கு பொருட்களை முன்வைக்க முடியும் என்பதைக் குறிப்பிடுக. (குறைந்தது நான்கு இலக்கு நுகர்வோரைக் குறிப்பிடுக)
04. பின்வரும் வணிக நிறுவனங்கள் ஆரம்பிப்பதற்கு பொருத்தமான இடங்களைக் குறிப்பிடுக.
    (அ) பாடசாலை உபகரணம் மற்றும் எழுதுகருவி விற்பனை நிலையம்
    (ஆ) காலணி விற்பனை நிலையம்
05. உற்பத்தி வேறுபாடு என்பதனால் கருதப்படுவது யாது? உற்பத்தியொன்றின் பெயரைக் குறிப்பிட்டு அது உற்பத்தி வேறுபாட்டிற்கு உட்படுத்தப்பட்டுள்ள விதத்தைக் குறிப்பிடுக.

(2×5= 10 புள்ளிகள்)

**வினா இல 05**

01. வணிக எண்ணத்திற்கும், வணிக வாய்ப்பிற்கும் இடையிலான இரண்டு வேறுபாடுகள் தருக.
02. பின்வரும் கூற்றுக்கள் சரியா? பிழையா என்பதைக் குறிப்பிடுக.
    I. அனைத்து வணிக எண்ணங்களும் வணிக வாய்ப்புகளாகின்றன.
    II. சந்தை இடைவெளியை இனங்கண்டு பொருட்களை முன்வைத்தல் புதிய வணிகமொன்றில் பிரவேசிப்பதற்கான உபாய மார்க்கங்களில் ஒன்றாகும்.
03. கோதுமை மாவின் விலை அதிகரிப்பால் வெதுப்பக உற்பத்திப் பொருட்களுக்கான விலைகளும் அதிகரிக்கப்படவுள்ளன. இச்சந்தர்ப்பத்தில் எழக் கூடிய வணிக எண்ணங்களுக்கு இரண்டு உதாரணம் தருக.
04. SWOT பகுப்பாய்வின் மூலம் வணிக எண்ணம் ஒன்றின் எத்தகைய விடயங்கள் பகுப்பாய்விற்குட்படுத்தப்படுகின்றன?
05. ஆக்கபூர்வமான வணிக எண்ணம் ஒன்றிற்கு எத்தகைய சட்டப்பாதுகாப்பை பெறமுடியும்?

(2×5= 10 புள்ளிகள்)

**வினா இல 06**

01. வணிக எண்ண மூலங்கள் பல்வேறு விதங்களில் வெளிப்படுகின்றது. அவற்றுள் பிரதான நான்கு மூலங்களைக் குறிப்பிடுக.
02. பாடசாலை கழிவுப்பொருள் பிரச்சினைகளை தீர்த்தல் தொடர்பாக உமக்கு தோன்றும் வணிக எண்ணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
03. சிறந்த வணிக எண்ணமொன்றை தேர்ந்தெடுக்கும் செயற்பாடு மூன்று படிமுறைகளினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றினைக் குறிப்பிடுக.
04. சிறந்த வணிக வாய்ப்பொன்றின் பண்புகள் நான்கு தருக.
05. வணிக எண்ணம் தொடர்பான SWOT பகுப்பாய்வில் ஈடுபடும்போது பயன்படுத்தக்கூடிய காரணிகள் சில கீழே தரப்படுகின்றன.

| | |
|---|---|
| தரமான உற்பத்திகள் | வளங்கள் காணப்படுதல் |
| கடுமையான சட்டதிட்டம் | மூலப்பொருள் பற்றாக்குறை |
| அரச ஊக்குவிப்புகள் | பொருளாதார வீழ்ச்சி |
| நிதிப்பற்றாக்குறை | போட்டியாளர்கள் விலகல் |

மேலே குறிப்பிட்ட விடயங்களை கீழ் குறிப்பிடப்படும் தலைப்புகளின் கீழ் வகைப்படுத்திக் காட்டுக.

(அ) பலம் (இ) வாய்ப்பு
(ஆ) பலவீனம் (ஈ) அச்சுறுத்தல்

(2×5= 10 புள்ளிகள்)

***************